# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 02.04.2025**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி,, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 136/B/2023**

திரு. அ. தமிழ்ராஜ் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(ஊராட்சிகள்),
ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார வளர்ச்சி
அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம் - 626 125. -- பொது அதிகார அமைப்பு

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 24.01.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, திருமதி. மு. சண்முகப்பிரியா, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் மற்றும் திருமதி.இரா.பூங்கொடி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் ஆகியோர் இருவரும் (02.04.2025) இன்று நேரில் ஆஜராகி, மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 10.03.2025 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வட்டாட்சியர் அவர்கள் திருமதி.கோமதி க/பெ. கொத்தாளமுத்து மற்றும் திருமதி.கருப்பாயம்மாள் ஆகிய இரண்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கும் படிவம் 7-இன்படி 1905-ஆம் ஆண்டு 3-ஆவது சட்டத்தின் 5-ஆவது பிரிவின் கீழ் ஏன் உங்களுக்கு தீர்வை விதிக்கக்கூடாது என்பதற்கும், அதனுடன் / அல்லது உங்களை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி, அதிலுள்ள பயிர்கள், விளைச்சல்கள், கட்டடங்கள், கட்டுமானங்கள், அதில் விட்டு வைத்திருக்கப்பட்டுள்ளவை ஆகிய இவைகள் சட்டத்தின் 6-ஆவது பிரிவின் கீழ் ஏன் பறிமுதல் செய்யக்கூடாது என்பதற்கும் காரணத்தை நீங்கள் விரும்பினால் 2025-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25-ஆம் தேதிக்குள் (25.03.2025) நேரிலாவது அல்லது எழுத்து வடிவிலாவது வட்டாட்சியர் முன்பாக தெரிவிக்கலாம் என்றவாறு அறிவிப்பு அனுப்பப்பட்டு, அது நிலுவையில் உள்ளது என்றும், மேற்கொண்டு மனுதாரருக்கு அறிக்கை அனுப்பி மனுதாரர் அதனைப் பெற்றுக்கொண்டு இந்த மனுவின்மீதான நடவடிக்கை நிலுவையில் உள்ளதாகவும், மேலும் ஆக்கிரமிப்பை அகற்றுவது குறித்து வட்டாட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததன்பேரில்

ஸ்ரீவில்லிபுத்தூர், வட்டாட்சியர் அவர்கள் இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுத்து, களஆய்வு செய்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி, அதன் புகைப்படத்துடன் (20.05.2025) அன்று வட்டாட்சியர், ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுடன் பொதுத் தகவல் அலுவலரும் நேரில் ஆஜராகி அறிக்கையை ஆணையத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 136/B/2023</u>**

1. பொதுத் தகவல் அலுவலர்,
   துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்),
   ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகம்,
   விருதுநகர் மாவட்டம் - 626 125.

2. வட்டார வளர்ச்சி அலுவலர்,
   ஸ்ரீவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
   விருதுநகர் மாவட்டம்.

3. வட்டாட்சியர்,
   ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
   விருதுநகர் மாவட்டம்.

4. வருவாய்த்துறை ஆய்வாளர்,
   ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
   விருதுநகர் மாவட்டம்.

5. நிலஅளவையர்,
   ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
   விருதுநகர் மாவட்டம்.

6. கிராம நிர்வாக அலுவலர்,
   ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
   விருதுநகர் மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு. அ. தமிழ்ராஜ் த/பெ. அந்தோணி (எ) திருப்பதி,
எண்.10/2, N. சண்முகசுந்தரபுரம்,
மீனாட்சிபுரம் அஞ்சல்,
ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.
செல்.9443867429.

Copy to: File GP PC